RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025





# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

www.malaithanthi.in

மாலை நாளிதழ்





சிவகங்கை | மலர்-5 | இதழ்- 136 | மே.24 2026 ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# வளர்ந்த இந்தியாவை நோக்கிய பயணம்; உலக நாடுகளும் இணைய விரும்புவதாக மோடி பெருமிதம்

புதுடில்லி: மே.24-

வளர்ச்சி அடைந்த இந்தியாவை உருவாக்க மேற்கொள்ளப்படும் பயணத்தில் உலகமே பங்கேற்க விரும்புகிறது என பிரதமர் மோடி தெரிவித்தார்.

புதுடில்லியில் 19வது ரோஜ்கார் மேளாவில், பல்வேறு அரசுத் துறைகளில் பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட 51 ஆயிரம் பேருக்கு, வீடியோ கான்பரன்ஸ் மூலம், நியமனக் கடிதங்களை பிரதமர் மோடி வழங்கினார். நிகழ்ச்சியில் அவர் பேசியதாவது: இன்று நாடு முழுவதும் உள்ள ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு மிகவும் முக்கியமான நாள்.

இந்திய இளைஞர்கள் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றம் குறித்து உலகம் மிகவும் உற்சாகமாக இருக்கிறது. இன்று, இந்தியாவின் வளர்ச்சிப் பயணத்தில் உலகம் ஒரு அங்கமாக இருக்க விரும்புகிறது. வளர்ச்சி அடைந்த இந்தியாவை நோக்கிய பயணத்தை விரைவுபடுத்துவதில் இந்திய இளைஞர்கள் முக்கியப் பங்காற்றி வருகின்றனர். வரும் ஆண்டுகளில், வளர்ந்த இந்தியாவுக்கான தீர்மானத்தை நிறைவேற்றுவதில் நீங்கள் அனைவரும் ஒரு முக்கியப் பங்கை ஆற்றப் போகிறீர்கள்.

இந்தச் சாதனைக்காக, உங்களையும் உங்கள் குடும்ப உறுப்பினர்களையும் நான் மனதார வாழ்த்துகிறேன். ரயில்வே, வங்கி, பாதுகாப்பு, சுகாதாரம், கல்வி மற்றும் பல துறைகளில் இளைஞர்கள் அனைவரும் புதிய பொறுப்புகளை ஏற்க உள்ளனர். இன்று, பணியமர்த்தப்பட்ட இளைஞர்கள் அனைவரும் நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் முக்கியப் பங்காளர்களாக மாறி வருகின்றனர்.

ஐக்கிய அரபு அமீரகம், நெதர்லாந்து, சுவீடன், நார்வே மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளுக்கு மேற்கொண்ட தனது பயணத்தின்போது கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் இந்தியாவின் இளைஞர்களுக்கு நேரடியாகப் பயனளிக்கும். இந்த ஒப்பந்தங்கள் அனைத்தும், ஒளிமயமான மற்றும் திறமையான இந்தியாவிற்கான உத்தரவாதத்துடன் வருகின்றன. இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.





# “கோவை சிறுமி கொலை வழக்கில் காவல்துறை துரிதமாக செயல்படவில்லை” : இபிஎஸ் குற்றச்சாட்டு

சென்னை: மே.24-

கோவை மாவட்டம் சூலூர் அருகே சிறுமி காணாமல் போன சில மணி நேரத்திலேயே புகார் அளிக்கப்பட்ட போதிலும் துரித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என குற்றம் சாட்டியுள்ள எடப்பாடி பழனிசாமி, சட்டம் ஒழுங்கு மற்றும் நிர்வாக திறனில் உள்ள குறைபாடுகளையே இது காட்டுவதாக விமர்சித்துள்ளார்.

இது தொடர்பாக அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில், “கோவை மாவட்டம் சூலூர் அருகே 10 வயது சிறுமி கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டிருக்கும் சம்பவம் தமிழகம் முழுவதும் பெரும் அதிர்ச்சியையும் வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது. அந்த சிறுமி உயிரிழப்பதற்கு முன்பு பாலியல் துன்புறுத்தலுக்கும் ஆளாகியிருக்கலாம் என்ற தகவல்கள் வெளியாகி மக்களிடையே மேலும்



அச்சத்தையும் கோபத்தையும் உருவாக்கியுள்ளது.

பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டிய இந்த அரசு, இத்தகைய கொடூர சம்பவங்களைத் தடுக்கத் தவறியது வேதனைக்குரியது.

சிறுமி காணாமல் போன சில மணி நேரத்திலேயே புகார் அளிக்கப்பட்டிருந்த போதிலும், துரிதமான நடவடிக்கை எடுக்கப்படாதது சட்டம்ஒழுங்கு மற்றும் நிர்வாக திறனில் உள்ள குறைபாடுகளை வெளிக்காட்டுகிறது.

பல மணிநேர போராட்டத்திற்கு பிறகு இந்த சம்பவத்தில் தொடர்புடையதாக இருவர் கைது செய்யப்பட்டிருந்தாலும், ஒரு ஏதுமறியா சிறுமியின் உயிரை காப்பாற்ற முடியாத நிலை அரசின் அலட்சியத்தையும் செயல்திறன் குறைவையும் சுட்டிக்காட்டுகிறது.

இந்த அரசு பெண்கள் பாதுகாப்பு குறித்து வெறும் விளம்பர நடவடிக்கைகளில் மட்டும் அல்லாமல், நிலையான மற்றும் பயனுள்ள பாதுகாப்பு அமைப்புகளை உருவாக்குவதிலும் தீவிரம் காட்ட வேண்டும். வெறும் ரீல்ஸ் அரசாக அல்லாமல் ரியல் அரசாகவும் நடந்து கொள்ள வேண்டும்.

இந்த மனிதாபிமானமற்ற குற்றச்செயலை வன்மையாக கண்டிப்பதுடன், குற்றவாளிகளுக்கு சட்டப்படி கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும் என்றும், இனி இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாத வகையில் பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய இந்த அரசு உடனடி மற்றும் உறுதியான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்துகிறேன்'' என தெரிவித்துள்ளார்.

# “கோயில்கள் இனி எனது நேரடி கண்காணிப்பில் இருக்கும்” : அறநிலையத்துறை அமைச்சர் ரமேஷ்

திருச்சி: மே.24-

'மைக்ரோ மேனேஜ்மென்ட்' முறை மூலம் தமிழகத்தின் அனைத்து கோயில்களும் தனது நேரடி கண்காணிப்பில் இருக்கும்படி பார்த்துக் கொள்ளப்போவதாக இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் எஸ். ரமேஷ் தெரிவித்துள்ளார்.

திருச்சியில் இன்று பெரும்பிடுகு முத்தரையர் சதயவிழாவில் பங்கேற்று, அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய இந்து சமய அறநிலைத்துறை அமைச்சர் எஸ்.ரமேஷ், பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார். அப்போது அவர், “எங்களது கொள்கை மதச்சார்பற்ற சமூகநீதி. அதுதான் எங்கள் கொள்கையாக எங்களது தலைவர் முன்னிறுத்தினார். அந்த கொள்கையை ஏற்றுக்கொண்டு சாதிய வேற்றுமை தவிர்த்து தந்தை பெரியார், சட்டமேதை அம்பேத்கரை கொள்கை தலைவராக ஏற்றுக்கொண்டு கட்சியில் இணைந்து பணியாற்றி வருகிறோம்.

சாதியோ, பணமோ, இனமோ, மொழியோ, பாலினமோ எந்தவித பாகுபாடும் கிடையாது என்பதை உறுதிமொழியாக ஏற்றுக்கொண்டு ஒவ்வொரு நாளும் அந்த உறுதியை நெஞ்சில் தாங்கிக் கொண்டு இருக்கிறோம்.

சாதி, பணம், இனம் என எதைப் பார்த்தும் எங்கள் தலைவர் எங்களுக்கு வாய்ப்பு கொடுக்கவில்லை. சேவை செய்யக்கூடிய மனநிலை இருக்கிறதா என்பதை பார்த்துதான் வாய்ப்பு வழங்கியிருக்கிறார். சாதியை வைத்து இங்கு பேச வேண்டிய அவசியம் கிடையாது. மக்களுக்காக இந்த சேவை செய்ய வந்திருக்கக்கூடிய எண்ணத்தை தான் நாம் பார்க்க வேண்டும்.

எங்கள் தலைவருக்காக மட்டுமே அனைவரும் வாக்களித்து உள்ளார்கள். எங்களுக்காக வாக்களிக்கவில்லை. தலைவர் விஜயை திரையில் பார்க்கும்போது யாரும் ஜாதி, மதம், இனம் அடிப்படையில் அவரை பார்க்கவில்லை. அதேபோன்றுதான் எங்களையும் மக்கள் பார்க்கிறார்கள். எங்கள் தலைவருக்கு இதுபோன்ற பிரிவினை பார்க்கக்கூடிய எண்ணமும் கிடையாது.

கோயிலுக்கு வரக்கூடிய பக்தர்கள் ஒரு நல்ல மனநிலையில் சுவாமி கும்பிட்டுவிட்டு அதே மனநிலையோடு செல்ல வேண்டும். அவர்களுக்கு எவ்வித சிரமமும் ஏற்படக்கூடாது. கோயில்களில் இருக்கக்கூடிய கூட்ட நெரிசல் மற்றும் நீண்ட நேரம் காத்திருக்கும் நிலை ஏற்படாத வண்ணம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தி உள்ளோம்.

அதேபோன்று கோயில் சார்ந்து இருக்கக்கூடிய சொத்துக்கள், நிலங்கள் மீதான ஆக்கிரமிப்புகள் அனைத்தும் ஒவ்வொன்றாக ஆய்வு செய்து மக்களுக்குப் பயனளிக்கக் கூடிய வகையில் அனைத்தும் மீட்டு கொண்டு வரப்படும்.

இந்து சமய அறநிலைத்துறையில் பணியாற்றும் உயர்மட்ட அதிகாரிகள் மட்டும் அல்ல, கீழ்மட்ட ஊழியர்கள் வரை எந்தவித ஊழலிலும் ஈடுபடவோ, அதிகாரத்தைப் பயன்படுத்தவோ இடம் கிடையாது. 'மைக்ரோ மேனேஜ்மென்ட்' முறை மூலம் அனைத்து கோயில்களும் எனது நேரடி கண்காணிப்பில் இருக்கும்.

ஏற்கனவே செயல்பட்டுக் கொண்டிருக்கும் திட்டங்கள் அனைத்தும் திறம்பட செயல்படுத்தப்படும். புதிய திட்டங்களும் கொண்டு வரப்படும். மக்களுக்கு பயனளிக்கக் கூடிய வகையில் நிர்வாகம் மேம்படுத்தப்படும்.

திருக்கோயில்களில் இதுவரை ஏதேனும் முறைகேடுகள் நடைபெற்றிருந்தால் அவை அனைத்தும் சரி செய்யப்பட்டு, இந்து சமய அறநிலைத்துறை ஒரு சிறந்த துறை என்று அனைவரும் பாராட்டக்கூடிய துறையாக செயல்படுத்துவேன்.

ஸ்ரீரங்கம் மற்றும் திருவானைக்கோவில் பகுதிகளில் அடிமனை பிரச்சினை அதிகமாக உள்ளது. அதுதொடர்பாக இன்று மாலை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆய்வுக் கூட்டம் நடக்கிறது. அதன் பின்னர் முழுமையான விவரங்களை தெரிவிக்கிறேன்.

மக்களுக்கு நியாயமான முறையில் என்ன கிடைக்க வேண்டுமோ அதை சரியான முறையில் பெற்று தருவேன். கோயில்களில் அனைத்து அடிப்படை வசதிகளும் மேம்படுத்தப்பட வேண்டும் என அறிவுறுத்தி இருக்கிறேன். கொஞ்சம் கால அவகாசம் மட்டும் கொடுங்கள். அனைத்தையும் நிச்சயம் செய்வேன்'' என தெரிவித்தார்.

# “தேர்தல் முடிவுகளுக்குப் பின் திமுக கூட்டணியை காப்பாற்றும் வலிமை எனக்கு இல்லை” : திருமாவளவன்

சென்னை: மே.24-

"தேர்தல் முடிவுகளுக்குப் பின் திமுக தலைமையிலான கூட்டணியை காப்பாற்றும் வலிமை எனக்கு இல்லை. தமிழ்நாட்டின் அரசியல் நெருக்கடியால் இந்த முடிவை எடுத்தோம் என்பதை மு.க.ஸ்டாலின் அறிவார்" என விசிக தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, “இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மற்றும் விசிக ஆகிய கட்சிகள் அமைச்சரவையில் இடம்பெற வேண்டும் என தவெக சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டது. அதன் பின்னர் தொண்டர்கள் மற்றும் முன்னணி பொறுப்பாளர்களுடன் மீண்டும் இது குறித்து கலந்து பேசினோம். எட்டாம் தேதி நடந்த உயர்நிலை குழு கூட்டத்தில் பெரும்பான்மையான தோழர்கள் ஆதரவு நல்குவது என முடிவெடுத்து விட்ட பிறகு அமைச்சரவையில் இடம்பெறுவது தான் சரியாக இருக்கும் என்ற கருத்தை முன் வைத்தார்கள்.

ஆனாலும் நான் கட்சியின் தலைவர் என்கிற முறையில் பொதுச்செயலாளர்களோடு மீண்டும் பேசிவிட்டு தான் முடிவை எடுப்பேன்; அந்த முடிவு என்னவாக இருந்தாலும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என கூறி விட்டேன்.

விசிக எடுத்த முடிவுக்கு பதவி ஆசை காரணம் இல்லை. தமிழ்நாட்டின் அரசியல் நெருக்கடியால் இந்த முடிவை எடுத்தோம் என்பதை மு.க.ஸ்டாலின் அறிவார். நானே அமைச்சரவையில் இடம்பெற வேண்டும் என்ற கருத்து வந்தபோது நான் அதற்கு இணங்கவில்லை. அமைச்சரவையில் இடம்பெறுவது உறுதிபடுத்தப்பட்டபோது வன்னி அரசை பரிந்துரைப்பதே சரி என முடிவு செய்தேன்.



தவெக அமைச்சரவையில் இடம்பெற்றது குறித்து மேற்கொண்டு கருத்து சொல்வதற்கு எதுவுமில்லை. தேர்தல் நேரத்தில்தான் யாருடன் பயணிப்பது, கூட்டணி என்பது குறித்த முடிவுகளை எடுப்பது வழக்கம். தேர்தலுக்கு முந்தைய காலத்தில், திமுக தலைமையிலான மதச்சார்பற்ற கூட்டணி நீடிக்க வேண்டும், அக்கூட்டணி வலுப்பெற வேண்டும் என்பதற்காக என்னாலான முயற்சிகளை செய்தேன்.

என்னை ஒரு துருப்புச் சீட்டாக பயன்படுத்தி திமுக கூட்டணியை சிதறடிக்க பல முனைகளில் இருந்தும், பல தரப்பினர் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டனர். அதற்கு சற்றும் இடம் கொடுக்காமல் நான் உறுதியாக நின்றேன். திமுக கூட்டணியை பலவீனப்படுத்த ஒரு போதும் இடம் தர மாட்டேன் என்பதை நடைமுறைப்படுத்தி காட்டுகிறேன். இதில் யாரும் மாற்றுக் கருத்தை சொல்ல முடியாது. என்னை குறிவைத்து சாதிய, மதவாத கட்சிகள் காய்களை நகர்த்தினார்கள். கோபமூட்டினார்கள்; ஆத்திரமூட்டினார்கள். என்னால் எந்த அளவுக்கு உறுதிணையாக இருக்க முடியுமோ, அந்தளவுக்கு துணையாக இருந்தேன்.

ஆனால் தேர்தலுக்கு பின் கூட்டணியை காக்கும் வலிமை எனக்கு இல்லை. காங்கிரஸ் எடுத்த முடிவை தடுக்கும் வலிமை எனக்கில்லை; கம்யூனிஸ்டுகள் எடுத்த முடிவை நிறுத்த எனக்கு வலிமை இல்லை. தமிழக மக்கள் கூட்டணி ஆட்சியை விரும்புகின்றனர்.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் நிலைபாட்டில் என்னால் தலையீடு செய்ய முடியாது. சமூக ஊடகங்களில் என் மீது மட்டும் அவதூறு கணைகளை வீசிவதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. காலத்தின் கட்டாயத்தால் கூட்டணி ஆட்சி ஏற்பட்டுள்ளது. இடதுசாரிகளின் முடிவை முன்வைத்து எங்கள் கட்சியில் ஆலோசித்து பின்னர் முடிவெடுத்தோம். நாங்கள் திமுக கூட்டணியில் இருந்தோம். ஆதரவு நல்குவதாக இருந்தாலும், இல்லாவிட்டாலும் அது எங்களில் உரிமை, சுதந்திரம். அதில் யாரும் தலையிட முடியாது.

திருமாவளவன் ஏன் தாமதப்படுத்துகிறார். தாமதத்துக்கு இது தான் காரணமா என வாய்க்கு வந்தபடி பேசினார்கள். அவதூறுகளை அள்ளி வீசினார்கள். எங்களின் அரசியல் உரிமையையோ, நேர்மையையோ கலங்கப்படுத்த யாருக்கும் உரிமை இல்லை. எங்கள் கட்சிக்கு ஒரு விதிமுறை, வரையறை இருக்கிறது.

ஒரு கட்சியை உருவாக்கி அந்த கட்சியை 10 ஆண்டுகள் கட்டுக்கோப்பாக வழி நடத்துவது அவ்வளவு இலகுவான காரியம் கிடையாது. மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் தலைவர் மு.க.ஸ்டாலினின் கவனத்துக்கு கொண்டு சென்று அவருடைய வாழ்த்துக்களுடன்தான் அல்லது ஆதரவோடுதான் அல்லது இசைவோடு தான் இந்த ஆதரவை ஆட்சி அமைப்பதற்காக வழங்குகிறோம் என்று அறிவித்து விட்டுதான் வழங்கி இருக்கிறோம். குடியரசுத் தலைவர் ஆட்சியை தடுக்க ஆதரவை வழங்கினோம்.

நீங்கள் இவ்வாறு செய்யக்கூடாது என எந்த இடத்திலும் அண்ணன் மு.க.ஸ்டாலின் சொல்லவில்லை. தற்போதைய அரசியல் சூழலை தெரிந்துகொண்டு, அவருடைய பக்குவத்தின் அடிப்படையில் அவர் இந்த விஷயத்தை அணுகினார். நாம் ஒற்றுமையோடு செயல்படுவோம்; தவெக ஆட்சி அமைக்க நாம் இடையூறாக இருக்க வேண்டியதில்லை என தெரிவித்துட்டார். இது அவரின் அரசியல் பக்குவத்தையும், முதிர்ச்சியையும் காட்டுகிறது.

விடுதலை சிறுத்தைகள் கட்சியின் வளர்ச்சியை பிடிக்காதவர்கள் தொடர்ந்து காலம் காலமாக எங்களுக்கு எதிராக காழ்ப்புணர்வை கக்கி வருகின்றனர். அவர்கள் திரும்பத் திரும்ப இதை செய்து கொண்டிருக்கிறார்கள்'' என்று தெரிவித்தார்.

## ஆபரேஷன் SHIELDNET
# சிவகங்கையில் 3வது நாளாக அதிரடி வேட்டை 512 வாகனங்கள் பறிமுதல், 27 பேர் கைது

சிவகங்கை, மே.24-
சிவகங்கை மாவட்டம் முழுவதும் குற்றவாளிகள் மற்றும் ரவுடிகளுக்கு எதிராக காவல்துறையினர் மேற்கொண்டு வரும் "ஆபரேஷன் SHIELD-NET" ஒருங்கிணைந்த தடுப்பு நடவடிக்கை 3வது நாளாக தீவிரமாக நடைபெற்று வருகிறது.



சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிவபிரசாத் உத்தரவின் பேரில், மே 20 முதல் நடைபெற்று வரும் இந்த சிறப்பு சோதனையில், ரவுடிகள் மற்றும் சந்தேக நபர்கள் மீது தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், நீண்ட நாட்களாக நிலுவையில் இருந்த பிடிவாரண்டுகள் நிறைவேற்றப்பட்டு, மீண்டும் மீண்டும் குற்றங்களில் ஈடுபடுவோருக்கு எதிராக BNSS பிரிவு 126ன் கீழ் தடுப்பு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

மூன்றாம் நாள் நிலவரப்படி, 823 சந்தேக நபர்கள் மற்றும் 694 ரவுடிகளிடம் விசாரணை நடத்தப்பட்ட நிலையில், 27 பழக்கப்பட்ட குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும், 25 பிடிவாரண்டுகள் நிறைவேற்றப்பட்டதுடன், 27 ரவுடிகளுக்கு எதிராக தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தொடர்ந்து குற்றங்களில் ஈடுபட்ட 28 பேரின் ஜாமீனை ரத்து செய்யவும் சட்ட நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது.

இதேபோல், மாவட்டம் முழுவதும் நடைபெற்ற வாகனச் சோதனையில், விதிமுறைகளை மீறி இயக்கப்பட்ட 512 இருசக்கர வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. குறிப்பாக நெம்பர் பிளேட் இல்லாமல் இயக்கப்பட்டவை, அதிவேகமாக ஓட்டப்பட்டவை மற்றும் சட்டவிரோத மின்விளக்கு மாற்றங்கள் செய்யப்பட்ட வாகனங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

குற்றச் செயல்களில் தொடர்ந்து ஈடுபடுவோர் மீது கண்காணிப்பு மேலும் தீவிரப்படுத்தப்பட்டு வருவதாகவும், சிவகங்கை மாவட்ட காவல்துறை ஒருங்கிணைந்து இந்த அதிரடி வேட்டையை தொடர்ந்து முன்னெடுக்கும் என்றும் காவல்துறை எச்சரித்துள்ளது.

# சிவகங்கை மேற்கு ஒன்றிய திமுக செயற்குழு கூட்டம்: ஓசெ.மந்தக்காளை பவானி திலகவதி செல்வமணி பாண்டியராஜா பங்கேற்பு

சிவகங்கை, மே.24-
சிவகங்கை மேற்கு ஒன்றிய திமுக செயற்குழுகூட்டமானது மேற்கு ஒன்றிய செயலாளரும் கண்டாங்கிபட்டி ஊராட்சி முன்னாள் தலைவருமான கண்டாங்கிபட்டி பெ.மந்தக்காளை தலைமையில் நடைபெற்றது...



மாவட்ட மகளிரணி அமைப்பாளர் பவானி கணேசன் . மாவட்ட மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர் ஒமேகா திலகவதி கண்ணன் ஒன்றிய துணைச் செயலாளர் மகராஜோதி செல்வமணி . ஒன்றிய பொருளாளரும் அரசு ஒப்பந்ததாரருமான அர. உசிலம்பட்டி பாண்டியராஜா . ஒன்றிய ஐடி விங் ஒருங்கிணைப்பாளர் தமறாக்கி அம்பலம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற இந்த கூட்டத்தின்போது அமைச்சரவை பதவியேற்பு விழாவில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடலை மூன்றாவது இடத்திற்கு தள்ளப்பட்டதற்கு கண்டனங்கள் . கடந்த சட்டமன்ற பொதுத் தேர்தலில் அயராது உழைத்த ஒன்றிய . கிளைக் கழக நிர்வாகிகள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது...

அதே போல் வருகின்ற ஜூன் 3 ந்தேதி தானைத் தலைவர் டாக்டர் கலைஞரின் 103 பிறந்த நாளினை முன்னிட்டு ஏராளமான கிளைக் கழகங்களிலும் கழக இரு வண்ணக் கொடியேற்றி வைத்து பொதுமக்களுக்கு இனிப்புகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாக் கொண்டாட வேண்டும் . அன்றைய தினம் மதியம் சிவகங்கை காமராஜர் காலனி அன்னை முதியோர் இல்லத்தில் மதிய உணவு வழங்கிட வேண்டும் எனவும் ஒன்றிய செயலாளர் மந்தக்காளை பேசினார்...

இந்தக் கூட்டத்தில் ஒன்றிய நிர்வாகிகளான முடிகண்டம் செல்வமணி காளைமேகம் செம்பூர் காட்டு ராஜா மீனாட்சி சுந்தரம் தமிழரசன் .முடிகண்டம் மோகன் .சமயத்துரை. சிவல்பட்டி சாமிநாதன் . மலைச்சாமி .காசி லிங்கம் ராமசாமி . பாலகிருஷ்ணன் . விளையாட்டு மேம்பாட்டு அணி கண்டாங்கிபட்டி நாராயணன் . இளைஞரணி அரசனூர் செந்தில் . செம்பூர் ஆறுமுகம் . சம்பத் . விளையாட்டு மேம்பாட்டு அணி தமறாக்கி தனலெட்சுமி . மகளிரணி புவனேஸ்வரி . பொன்னுச்சாமி .போதி ராஜா . சரவணன் உள்ளிட்ட ஏராளமான திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# அமைச்சரான தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் சரத்குமார் வெற்றியை கொண்டாடி 200 பேருக்கு உணவு வழங்கிய த.வெ.க நிர்வாகிகள்

தாம்பரம் மே.24-
செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் தொகுதியில் நடைபெற்ற 2026 சட்டமன்ற தேர்தலில் தமிழ்நாடு வெற்றி கழகம் சார்பில் போட்டியிட்ட கில்லி சரத்குமார் பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்று தாம்பரம் சட்டமன்ற உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டார். இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு மனித வள மேம்பாடு மற்றும் ஓய்வு பெற்ற ராணுவ வீரர் நலன் துறை அமைச்சராக பொறுப்பேற்றதை முன்னிட்டு இன்று தாம்பரம் கிழக்கு மற்றும் மேற்கு தாம்பரம் பகுதிகளில் ஏழை, எளிய மக்களுக்கு உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.



இந்த நிகழ்ச்சியில் சுமார் 200க்கும் மேற்பட்டோருக்கு உணவு வழங்கப்பட்டது. செங்கல்பட்டு வடமேற்கு மாவட்ட தமிழக வெற்றி கழகம் துணை செயலாளர் வரலட்சுமி (எ) ஷீபா பிரேம், மாவட்ட மாணவர் அணி இணை அமைப்பாளர் இம்ரான்கான், தாம்பரம் மாநகர 54வது வட்ட துணை செயலாளர் குட்டி, மகளிர் அணி நிர்வாகி சினேகா உள்ளிட்டோர் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு உணவு வழங்கி நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

மேலும், பொதுமக்கள் மற்றும் கட்சி நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டு அமைச்சர் கில்லி சரத்குமாருக்கு வாழ்த்துகளை தெரிவித்தனர்.

# "கோவை சிறுமி கொலை வழக்கில் குறுகிய காலத்தில் தீர்ப்பு வழங்கப்பட வேண்டும்" ராமதாஸ்

சென்னை: மே 24-
"கோயம்புத்தூர் மாவட்டம் சூலூர் அருகே 10 வயது சிறுமி கடத்தப்பட்டு பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு, கொலை செய்யப்பட்ட வழக்கை விரைவு நீதிமன்றத்தில் விசாரித்து குறுகிய காலத்திலேயே தீர்ப்பு வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று பாமக நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.



இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் அருகே 10 வயது சிறுமி கடத்தப்பட்டு பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு கொடூரமாகக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தமிழக மக்களை உலுக்கியுள்ளது. விளையாடிக்கொண்டிருந்த ஒரு குழந்தை பாதுகாப்பாக வீடு திரும்ப முடியாத நிலை உருவாகியுள்ளது என்பது மிகுந்த வேதனையையும் அதிர்ச்சியையும் அளிக்கிறது. இந்த மனிதாபிமானமற்ற குற்றச்செயலில் ஈடுபட்ட குற்றவாளிகளுக்கு கடுமையான சட்டப்பூர்வ தண்டனை வழங்கப்பட வேண்டும். இந்த வழக்கை விரைவு நீதிமன்றத்தில் விசாரித்து குறுகிய காலத்திலேயே தீர்ப்பு வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு உரிய நிவாரணமும், உளவியல் ஆதரவும் வழங்கப்பட வேண்டும். தமிழகத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் தொடர்ந்து அதிகரித்து வருவது கவலைக்குரியது. சட்டம் ஒழுங்கை பாதுகாக்க வேண்டிய அரசு மற்றும் காவல் துறை, பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக கிராமப்புறங்கள் மற்றும் நகர்ப்புற புறநகர் பகுதிகளில் கண்காணிப்பு, இரவு ரோந்து, குழந்தைகள் பாதுகாப்பு விழிப்புணர்வு ஆகியவை வலுப்படுத்தப்பட வேண்டும். பெண்களும் குழந்தைகளும் அச்சமின்றி வாழக்கூடிய பாதுகாப்பான தமிழகத்தை உருவாக்க தமிழக அரசு உடனடியாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறேன். இந்த கொடூர சம்பவம் மீண்டும் எங்கும் நிகழாத வகையில் நிரந்தரமான பாதுகாப்பு அமைப்புகளை அரசு உருவாக்க வேண்டும்" என தெரிவித்துள்ளார்.





# மடப்புரத்தில் தேங்கிய கழிவுநீர்: தொற்றுநோய் பரவும் அபாயத்தில் பொதுமக்கள் அச்சம்

மடப்புரம், மே.24-
சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மடப்புரம் பகுதியில் கழிவுநீர் கால்வாய்கள் முறையாக பராமரிக்கப்படாததால் சுகாதார சீர்கேடு ஏற்பட்டுள்ளதாக பொதுமக்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

கால்வாய்களில் பிளாஸ்டிக் கழிவுகள் மற்றும் குப்பைகள் தேங்கி கிடப்பதால் கழிவுநீர் வெளியேற முடியாமல் ஆங்காங்கே தேங்கி நிற்கிறது. இதனால் கடும் துர்நாற்றம் வீசுவதுடன், கொசு உற்பத்தியும் அதிகரித்துள்ளதாக கூறப்படுகிறது.

கோடைக்கால சூழலில் காய்ச்சல் உள்ளிட்ட தொற்றுநோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர். உடனடியாக குப்பைகளை அகற்றி, கால்வாய்களை சுத்தம் செய்து கிருமிநாசினி தெளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஊராட்சி நிர்வாகத்துக்கு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# உயிலை பதிவு செய்ய வேண்டியது கட்டாயம் அல்ல உச்சநீதிமன்றம் அதிரடி உத்தரவு

டெல்லி:மே 24-
தவெக வேட்பாளரான சினோரா அசோக் மீது தாக் இந்திய சட்டப்படி உயில்களை பதிவு செய்ய வேண்டியது இல்லை என உச்சநீதிமன்ற நீதிபதிகள் கூறியுள்ளனர். சொத்து



உயிலை பதிவு செய்ய வேண்டியது இந்திய சட்டப்படி கட்டாயம் அல்ல, உயிலை பதிவு செய்யாததாலேயே அதன் நம்பகத்தன்மையை கேள்வி எழுப்ப முடியாது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது

# தமிழ்நாட்டில் மின் தட்டுப்பாடு என்ற நிலை இல்லை: அமைச்சர் நிர்மல்குமார்

சென்னை, மே.24-
மின்தடை பிரச்சனையை சரி செய்ய கடந்த இரண்டு நாட்களாக மின்சார துறை சார்பில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. எங்கெங்கெல்லாம் தவறு நடைபெறுகிறது என்று கண்டறிந்து சரி செய்து வருகிறோம் என மின்சாரத்துறை அமைச்சர் நிர்மல்குமார் கூறியுள்ளார்.



செய்தியாளர்கள் சந்திப்பில் அமைச்சர் கூறியதாவது:

தமிழ்நாட்டில் மின் தட்டுப்பாடு என்ற நிலை இல்லை. போதுமான மின்சாரம் கையிருப்பு உள்ளது . உள்ளூர் மின் தேவை திடீரென அதிகரிப்பது, பழைய மின்மாற்றிகள், சேதமடைந்த மின்கம்பிகளால் மின் தடை ஏற்பட்டு வருகிறது. இதில் தனிநபர்கள் மீது தவறு இருந்தால் உடனடி நடவடிக்கை எடுக்கப்படும்



■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை ஒன்றியம் மாங்குளம் பஞ்சாயத்திற்குட்பட்ட பட்டத்தரசி கிராமத்தில், மன்னர் முத்தரையர் நினைவுதினத்தை முன்னிட்டு அவரது திருவுருவச்சிலைக்கு மாலை அணிவிக்கும் நிகழ்ச்சி இன்று நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் இளங்கோவன் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினார். மேலும், சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் முத்துபாரதி, நகர் செயலாளர், ஒன்றிய செயலாளர் கண்ணன் உள்ளிட்ட தவெக நிர்வாகிகள் மற்றும் கழகத்தினர் பலரும் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி மரியாதையுடன் நடைபெற்றது.

# இயற்கை வளங்களை சேதப்படுத்தும் சட்டவிரோத செயல்களில் தொடர்ந்து ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்: அமைச்சர் பேட்டி

இராமநாதபுரம், மே.24-
இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள விருந்தினர் மாளிகையில், தமிழக சுற்றுச்சூழல் துறை அமைச்சர் வி.கே. ராஜு மற்றும் தமிழக வெற்றி கழக இராமநாதபுரம் மேற்கு மாவட்ட செயலாளர் மதன் ஆகியோர் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தனர்.



அப்போது பேசிய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் வி.கே. ராஜு, தமிழக முதலமைச்சரும் தமிழக வெற்றி கழகத்தின் தலைவருமான விஜய் அவர்கள் தனக்கு முக்கியமான பொறுப்பையும், மக்கள் பணியாற்ற ஒரு சிறந்த வாய்ப்பையும் வழங்கியுள்ளதாக தெரிவித்தார். அந்த நம்பிக்கைக்கு ஏற்ப மக்கள் நலன் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு பணிகளில் முழு அர்ப்பணிப்புடன் செயல்படுவேன் என்றும் கூறினார். தொடர்ந்து அவர் கூறுகையில், இராமநாதபுரம் மாவட்டத்தின் திருவாடானை உள்ளிட்ட பகுதிகளில் அனுமதி இன்றி மணல் திருட்டில் ஈடுபடுபவர்கள் உடனடியாக அந்த செயல்களை நிறுத்திக் கொள்ள வேண்டும் என கடும் எச்சரிக்கை விடுத்தார். இயற்கை வளங்களை சேதப்படுத்தும் சட்டவிரோத செயல்களில் தொடர்ந்து ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

மேலும், சேலம், ஈரோடு உள்ளிட்ட பகுதிகளில் செயல்பட்டு வரும் சாயப்பட்டறைகளில் இருந்து சுத்திகரிக்கப்படாமல் வெளியேற்றப்படும் கழிவுகள் பொதுமக்களின் உடல்நலத்திற்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருவதாக கூறினார். குறிப்பாக குழந்தைகள் மற்றும் பொதுமக்களுக்கு புற்றுநோய் உள்ளிட்ட ஆபத்தான நோய்கள் உருவாகும் அபாயம் நிலவி வருவதால், சாயப்பட்டறை கழிவுகளை முறையாக சுத்திகரித்து மட்டுமே வெளியேற்ற வேண்டும் என்றும், விதிமுறைகளை மீறும் நிறுவனங்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்தார்.

ராமநாதபுரம், ராமேஸ்வரம் மற்றும் தனுஷ்கோடி உள்ளிட்ட முக்கிய சுற்றுலா தலங்களுக்கு தினமும் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். அந்த பகுதிகளை தூய்மையாகவும், குப்பைகள் தேங்காத வகையிலும் பராமரிக்க சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் போதைப்பொருள் கடத்தல் மற்றும் விற்பனையில் ஈடுபடுபவர்கள் உடனடியாக அந்த செயல்களை கைவிட வேண்டும் என்றும், இல்லையெனில் கடுமையான தண்டனைகள் எதிர்நோக்க நேரிடும் என்றும் எச்சரித்தார். இளைஞர்கள் போதை பழக்கங்களிலிருந்து விலகி கல்வி மற்றும் நல்ல முன்னேற்றப் பாதையில் பயணிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

மேலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் நிலவி வரும் குடிதண்ணீர் பிரச்சினை தீர்க்கப்படும் என உறுதியளித்தார் நிகழ்ச்சியில் கட்சியின் முக்கிய நிர்வாகிகள் தொண்டர்கள் உடன் இருந்தனர்.

# நீலகிரி மாவட்ட சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு காவல் துறையின் விழிப்புணர்வு முகாம்

நீலகிரி, மே.24-
நீலகிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆனைக்கிணங்க, சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் M.சுந்தரேசன் தலைமையில் 22.05.2026 அன்று குன்னூர் காவல் உட்கோட்டம், கோத்தகிரி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பழங்குடியின ருக்கள தொண்டுநிறுவனமான NAVA அலுவலகத்தில், பழங்குடியினர் பற்றிய ஆய்விற்காக வந்திருந்த சென்னை பல்கலைக் கழக மாணவ,மாணவிகள் மத்தியில் விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டது.

இம்முகாமில் நீலகிரி மாவட்ட SJHR பிரிவு துணைகாவல்கண்காணிப்பாளர் M.சுந்தரேசன் கலந்து கொண்டு SC/ST வன்கொடுமை தடுப்புச் சட்டம், POC-SO சட்டம், Cyber crime,,மாணவ மாணவியருக்கான அரசின் கல்வி,வேலைவாய்ப்பு திட்டங்கள் குறித்து எடுத்து கூறினார்.

# “இந்திய மறுமலர்ச்சியின் தந்தை இராஜா ராம்மோகன் ராய்”

ஆரம்பம் :

"19 ஆம் நூற்றாண்டில் இந்திய விடுதலைக்கு ஆடிக் கொண்டிருந்த சூழலுக்கு மத்தியில் சமூக சீர்திருத்தமும் நம் சமுதாயத்திற்கு மிக அவசியமான ஒன்றாக இருந்தது. அதை சரியான வடிவில் எடுத்துச் சென்ற சில முக்கியமான தலைவர்களுள் ஒருவர் இராஜாராம் மோகன்ராய் ஆவார். ஆகவே தான் இவர், "இந்திய மறுமலர்ச்சியின் தந்தை" என்றும், "நவீன இந்தியாவின் தந்தை" என்றும் போற்றப்படுகிறார். 19ஆம் நூற்றாண்டில் இந்திய சமுதாயத்தில் நிலவிய மூடநம்பிக்கைகள், சாதி அமைப்பு மற்றும் பெண்களுக்கு எதிரான கொடுமைகளுக்கு எதிராகப் போராடி, நவீன சிந்தன சிந்தனைகளுக்கும், பெண் கல்விக்கும் வித்திட்ட சமூக சீர்திருத்தவாதி ஆவார்.

பிறப்பு:

மே 22, 1772 ஆம் ஆண்டு அன்று மேற்கு வங்காளத்தில் உள்ள ஹூக்ளி மாவட்டத்தில் உள்ள ராதாநகர் என்ற கிராமத்தில் பிறந்தார். இவரின் பெற்றோர் ராம்கந்தோ ராய் தாரிணி தேவி ஆவர்.சிறுவயதிலேயே சமஸ்கிருதம், பாரசீகம், அரபு, ஆங்கிலம், கிரேக்கம், லத்தீன் உள்ளிட்ட பல



மொழிகளைக் கற்றார்.

சதி ஒழிப்பு:

கணவர் இறந்ததும் மனைவியும் உடன்கட்டை ஏறும் 'சதி' எனும் கொடிய வழக்கத்தை ஒழிக்க தீவிரமாகப் போராடினார். 1829 ஆம் ஆண்டில் ஆங்கிலேய கவர்னர் ஜெனரல் வில்லியம் பெண்டிங் 'சதி'யைத் தடை செய்து சட்டம் இயற்றியதில் இராஜாராம் மோகன் ராய் பெரும் பங்கு வகித்தார்.

பெண்ணுரிமை:

பெண்களின் கல்வி, மற்றும் சொத்துரிமைக்காகக் குரல் கொடுத்தார். பலதார திருமணத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க அரும்பாடுபட்டார். விதவைப் பெண்கள் மறுமணம் செய்து கொள்ள உரிமை உடையவர்கள் எனும் கருத்தை முன் வைத்தார். பெண் அடிமைத்தனத்தை எதிர்த்த இவர், ஆண்கள், பெண்களை தங்களுக்கு கீழானவர்களாக நடத்தும் நடைமுறையை எதிர்த்தார்.

கல்வி முறை:

இந்தியாவில் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும், மேல்நாட்டு கல்வி முறையுடன் அறிவியலும், ஆங்கிலக் கல்வியும் பரவ வேண்டும் என்பதை முழுமையாக விரும்பினார். மேல்நாட்டு கல்வி முறையுடன், இந்தியக் கல்வி முறையும் இணைந்த பாடத்திட்டத்தை உருவாக்கப் பாடுபட்டார்.1817 ஆம் ஆண்டு ஸ்காட்லாந்து கல்வியாளர் டேவிட் ஹரே உடன் இணைந்து கொல்கத்தா இந்து கல்லூரியை நிறுவ உதவினார்

பத்திரிக்கைத் துறை:

இந்தியாவில் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்த 'சம்பாத் கௌமுதி' என்ற வங்காள மொழி பத்திரிக்கையையும் 'மீரட்அல் அக்பர்' என்ற பாரசீக மொழி பத்திரிகையையும் நடத்தினார். பிராமனிகல் மேகன் என்ற ஆங்கிலப் பத்திரிகையை 1921 ஆம் ஆண்டு இவரது படைப்புகள் வெளிவந்தன.



இவரது நூல்கள்ன்:

சமூக, மத சீர்திருத்தங்கள் மற்றும் ஏகத்துவக் கொள்கைகளை (ஒரே கடவுள் ) வலியுறுத்திப் பல நூல்களையும், இதழ்களையும் பெங்காலி, பாரசீகம், அரபு மற்றும் ஆங்கில மொழிகளில் எழுதியுள்ளார். துஹ்ஃபத்உல்முவாஹிதின்(1803), ஆத்மிய சபா வெளியீடுகள்(1814), இயேசுவின் கட்டளைகள்(1820), வேதாந்தர சூத்திரம், ஆகியவை இவரது சில குறிப்பிடத்தக்க நூல்களாகும்

பிரம்ம சமாஜம்:

இந்தியாவின் முதல் சமூக சீர்திருத்த இயக்கமாக 1828 ஆம் ஆண்டு ' பிரம்ம சமாஜம்' என்ற இயக்கத்தை நிறுவினார். அதே ஆண்டு ஆகஸ்ட் மாதம் கொல்கத்தாவில் ஒரு கோவிலை நிறுவினார். கோவிலில் திருவுருவ சிலைகள் எதுவும் அமைக்கப்படவில்லை. இங்கு எந்த ஒரு மதத்தையும் குறைத்து மதிப்பிடவும், தவறாக பேசுவதும் கூடாது என எழுதி வைத்தார். இதன் மூலம் இந்து மதத்தில் இருந்த சிலை வழிபாடு, பலி கொடுத்தல் மற்றும் சாதிப் பாகுபாடுகளை எதிர்த்து, ஒரே கடவுள் கொள்கையைப் பரப்பினார். இந்துக்களின் மறை நூல்கள் அனைத்தும் ஒரு கடவுள் கோட்பாட்டை வலியுறுத்துவதாகவே கூறினார். பிரம்ம சமாஜம் உருவ வழிபாட்டை தவிர்க்கவும், சமயச் சடங்குகள் மற்றும் சம்பிரதாயங்களை எதிர்த்தது. 1815 ஆம் ஆண்டு 'ஆத்மிய சபா' என்ற அமைப்பையும் இராஜா ராம்மோகன் ராய் நிறுவினார்.

சமூக ஏற்றத்தாழ்வுகள்:

தீண்டாமை, சாதி, சிசுக்கொலை மற்றும் குழந்தைத் திருமணம் ஆகியவற்றைக் கடுமையாக எதிரத்தார்.

சிறப்புகள்:

முகலாய மன்னர் இரண்டாம் அக்பர், இவரின் அறிவுத் திறமையைப் பாராட்டி 'ராஜா' என்ற பட்டத்தை வழங்கினார்.

ரவீந்திரநாத் தாகூர் இவரை "இந்திய வரலாற்றின் பிரகாசமான நட்சத்திரம்" (Luminous star in the firmament of Indian history) என்று அழைத்தார்.

நிறைவு:

1830 ஆம் ஆண்டு இங்கிலாந்துக்குச் சென்ற இவர், செப்டம்பர் 27, 1833 இங்கிலாந்தின் பிரிஸ்டல் நகரில் தனது 61 வது வயதில் காலமானார்.

"இந்தியாவின் முதல் நவீன மனிதர்", "வங்காள மறுமலர்ச்சியின் தந்தை", "மக்களின் தந்தை " என்று புகழாரம் சூட்டப்பட்ட ராஜாராம் மோகன் ராய் இவ்வுலகில் இருந்து மறைந்து சுமார் இரண்டு நூற்றாண்டுகள் கழிந்த பின்னும் அவர் விட்டுச் சென்ற சமூக சீர்திருத்தங்கள் தொடர்வது ஒரு ஆரோக்கியமான சமுதாயத்திற்கு வழிவகுக்கிறது.

**மகா பிரபு,**
ஆசிரியர் - கட்டுரையாளர்,
கல்லல் முருகப்பா
மேல்நிலைப் பள்ளி,
கல்லல் 630305,
சிவகங்கை மாவட்டம்.
அலைபேசி: 9944089151



## பக்ரீத் பண்டிகை எதிரொலி: குந்தாரப்பள்ளி ஆட்டுச் சந்தையில் விற்பனை மந்தம்

கிருஷ்ணகிரி, மே.24-

கிருஷ்ணகிரி அடுத்த குந்தாரப்பள்ளியில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் பிரசித்திபெற்ற ஆடு மற்றும் மாட்டுச் சந்தை நடைபெற்று வருகிறது. இந்த சந்தைக்கு தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்கள் மட்டுமின்றி, கேரளா, ஆந்திரா மற்றும் கர்நாடகா மாநிலங்களிலிருந்தும் வியாபாரிகள் மற்றும் கால்நடை வளர்ப்போர் அதிக அளவில் வந்து கால்நடைகளை வாங்கி, விற்பனை செய்து செல்கின்றனர்.

வரும் 28ஆம் தேதி பக்ரீத் பண்டிகை நடைபெற உள்ளதை முன்னிட்டு நேற்று நடைபெற்ற சந்தைக்கு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆடுகள் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டிருந்தன.

ஆனால் பக்ரீத் பண்டிகைக்கு இன்னும் ஆறு நாட்கள் உள்ளதால் வெளிமாவட்ட மற்றும் வெளிமாநில வியாபாரிகள் குறைவாக வந்திருந்தனர். இதன் காரணமாக ஆடுகள் விற்பனை மந்தமாக காணப்பட்டது. சந்தையில் கொண்டு வரப்பட்ட ஆடுகளில் சுமார் 3 ஆயிரம் ஆடுகள் மட்டுமே விற்பனையானதாக கூறப்படுகிறது.

சந்தையில் 25 கிலோ எடையுடைய பெண் ஆடு ரூ.20 ஆயிரத்திற்கும், கிடா ஆடுகள் ரூ.25 ஆயிரம் முதல் ரூ.35 ஆயிரம் வரையும் விற்பனையானது. கடந்த ஆண்டுகளில் இந்த சந்தையில் ரூ.8 கோடி வரை ஆடுகள் விற்பனையாகிய நிலையில், இந்த ஆண்டு ஆடுகளின் விலை அதிகரித்திருப்பதாலும், வியாபாரிகள் வருகை குறைந்ததாலும் நேற்று நடைபெற்ற சந்தையில் ரூ.2.50 கோடி மதிப்பிலான ஆடுகள் மட்டுமே விற்பனையானதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விற்பனை எதிர்பார்த்த அளவிற்கு நடைபெறாததால் பல விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்போர் ஏமாற்றத்துடன் விற்பனையாகாத ஆடுகளை மீண்டும் பட்டிகளுக்கு கொண்டு சென்றனர்.




## அராஜக செயல்களில் ஈடுபடுவோருக்கு சட்டத்தின் கீழ் கடுமையான தண்டனை பெற்றுத்தர தமிழ்நாடு அரசு உறுதியுடன் செயல்படும்‘‘முதல்வர் விஜய்

கோயம்புத்தூர், மே.24-

கோயம்புத்தூரில் நேற்று முன்தினம் 10 வயது சிறுமிக்கு நிகழ்ந்த கொடூர சம்பவம் மிகுந்த வேதனையையும் அதிர்ச்சியையும் அளிக்கிறது

மனிதநேயமற்ற மற்றும் மன்னிக்க முடியாத குற்றச் செயல்கள் நமது சமூகத்தில் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாது குழந்தையைப் பிரிந்து வாடும் சிறுமியின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த துயரத்தைப் பகிர்ந்துகொள்கிறேன் வழக்கில் தொடர் புடையதாக இரண்டு குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் குறித்துத் தீவிர மற்றும் விரைவான விசாரணை மேற்கொள்ள காவல்துறைக்கு உத்தரவு. குற்றப்பத்திரிகையை உடனடியாக தாக்கல் செய்யத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முதல்வர் விஜய் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

## விவசாயிகளின் பயிர்க்கடன் தள்ளுபடி செய்ய கோரிக்கை

கிருஷ்ணகிரி, மே.24-

தமிழக விவசாயிகள் சங்கத்தின் மத்தூர் ஒன்றிய செயலாளர் ரவீந்தராசு, தமிழக முதல்வருக்கு கோரிக்கை மனு அனுப்பியுள்ளார்.

அந்த மனுவில், தமிழக விவசாயிகள் கூட்டுறவு கடன் சங்கங்களில் பெற்றுள்ள பயிர்க்கடன்களை விரைவாக தள்ளுபடி செய்து, அதற்கான நிதியை வரும் பட்ஜெட்டில் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என தெரிவித்துள்ளார்.

மேலும், கூட்டுறவு கடன் சங்கங்கள் தொடர்ந்து லாபகரமாக செயல்படவும், விவசாயிகள் நலன் பெறவும், நிலுவையில் உள்ள அனைத்து விவசாயக் கடன்களையும் தள்ளுபடி செய்து, மீண்டும் புதிய விவசாயக் கடன்கள் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.








■ நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், புதிதாக பதவியேற்ற மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ். பிருந்தா மரியாதை நிமித்தமாக, மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு நேரில் சந்தித்து புத்தகம் வழங்கினார்.

## வலம்புரி விநாயகர், மாரியம்மன் கோவில் மஹா கும்பாபிஷேக பால்குட ஊர்வலம்

கிருஷ்ணகிரி, மே.24-

கிருஷ்ணகிரி ஒன்றியம் சாப்பரம் ஊராட்சிக்குட்பட்ட குட்டிகவுண்டனூர் கிராமத்தில் அமைந்துள்ள வலம்புரி விநாயகர் மற்றும் மாரியம்மன் கோவில் மஹா கும்பாபிஷேக விழா வரும் 25ஆம் தேதி விமரிசையாக நடைபெற உள்ளது.

இதனை முன்னிட்டு கடந்த 14ஆம் தேதி முளைப்பாரி இடுதல், கொடியேற்றம் மற்றும் கங்கணம் கட்டுதல் உள்ளிட்ட விழா நிகழ்ச்சிகள் நடைபெற்றன. தொடர்ந்து நேற்று ஊர் பொதுமக்கள் அனைவரும் இணைந்து கங்கை அழைப்பிற்காக தென்பெண்ணை ஆற்றில் இருந்து புனிதநீரை எடுத்து ஊர்வலமாக கோவிலுக்கு கொண்டு வந்தனர். பின்னர் கோவிலில் வலம்புரி விநாயகர் மற்றும் மாரியம்மனுக்கு சிறப்பு அபிஷேகங்கள் நடத்தப்பட்டு, பக்தர்கள் நேர்த்திக்கடன் செலுத்தி





வழிபட்டனர்.

விழாவை முன்னிட்டு வரும் 24ஆம் தேதி முளைப்பாரி அழைப்பு, கணபதி ஹோமம், லட்சுமி ஹோமம், நவக்கிரக ஹோமம், வாஸ்து சாந்தி, பிரவேச பலி, காப்பு கட்டுதல், கலச ஸ்தாபனம், முதல்கால யாக பூஜை, 108 திரவிய ஹோமம், பூர்ணாஹூதி மற்றும் தீபாராதனை நடைபெற உள்ளது.

அதேபோல் இரவு நேரத்தில் கோபுர கலசம் வைத்தல், மூலவருக்கு எந்திரம், நவரத்தினம் மற்றும் பஞ்சலோகம் வைத்து அஷ்டபந்தன மருந்து சாற்றுதல் உள்ளிட்ட சிறப்பு பூஜைகளும் நடைபெற உள்ளன.

விழாவின் முக்கிய நிகழ்வான மஹா கும்பாபிஷேகம் 25ஆம் தேதி காலை நடைபெறுகிறது. அன்றைய தினம் இரண்டாம் கால யாக வேள்வி, 108 மூலிகை ஹோமம் உள்ளிட்ட பூஜைகள் நடைபெற்று, வலம்புரி விநாயகர் மற்றும் மாரியம்மன் கோவில் கோபுர கலசங்களுக்கு புனிதநீர் ஊற்றி மஹா கும்பாபிஷேகம் சிறப்பாக நடத்தப்பட உள்ளது. இதில் சுற்றுவட்டார பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொள்வார்கள் என விழாக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

## கிருஷ்ணகிரி ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில், இ-நாம் முறையில் நடந்த ஏலத்தில், 3.52 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் விற்பனை செய்யப்பட்டது

கிருஷ்ணகிரி, மே.24-

கிருஷ்ணகிரி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், இநாம் முறையில் நடந்த மஞ்சள் ஏலத்தில், 9 விவசாயிகள், 42 மூட்டை மஞ்சளை விற்பனைக்காக கொண்டு வந்திருந்தனர். இதில், ஒரு குவிண்டால் விரலி மஞ்சள் அதிகபட்ச விலை, 13,339 ரூபாய், குறைந்தபட்ச விலை, 12,899 ரூபாய், உருண்டை மஞ்சள் அதிகபட்ச விலை, 12,473 ரூபாய், குறைந்தபட்ச விலை, 11,899, பனங்காலி, 26,009 ரூபாய்க்கு விற்பனையானது. மொத்தம், 2,662 கிலோ மஞ்சள், 3.52 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது. விற்பனை செய்த தொகை விவசாயிகளின் வங்கி கணக்கில் செலுத்தப்பட்டது. இது குறித்து, கிருஷ்ணகிரி



ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் பழனியம்மாள் கூறுகையில், ‘‘கிருஷ்ணகிரி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், இ-நாம் முறையில் நடந்த ஏலத்தில், மஞ்சளின் தரத்திற்கு ஏற்ப அதிகபட்ச விலை கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. விவசாயிகள் தங்கள் விளைபொருளை கிடங்கில் இருப்பு வைத்து சந்தை மதிப்பில், 50 முதல், 75 சதவீதம் வரை ஆண்டுக்கு, 5 சதவீதம் வட்டியில் பொருளீட்டு கடன் பெறலாம். உரிய விலை கிடைக்கும்போது விற்பனை செய்யும் வசதியும் உள்ளது. மேலும் சந்தேகங்களுக்கு, 99522 67990 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம்’’ என்றார்.

# காளையார்கோவில் வட்டாரத்தில் எண்ணெய்வித்து பயிர்களில் மேம்படுத்தப்பட்ட உற்பத்தி தொழில்நுட்பங்கள் குறித்த விவசாயிகள் பயிற்சி





சிவகங்கை, மே.24-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் வட்டாரத்தில் வேளாண்மைத்துறை சார்பில் அட்மா மாநில விரிவாக்க திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்புத்திட்டத்தின் கீழ் மந்திக்கண்மாய் கிராமத்தில் எண்ணெய்வித்து பயிர்களில் மேம்படுத்தப்பட்ட உற்பத்தி தொழில்நுட்பங்கள் குறித்த விவசாயிகள் பயிற்சி நடைப்பெற்றது.

உதவி இப்பயிற்சிக்கு வேளாண்மை இயக்குநர் (பொ)திருமதி . தைப்பத்துல் ஆசிபா தலைமை தாங்கி விதை முதல் விதை வரை விவசாயிகள் கடைப்பிடிக்கும் தொழில்நுட்பங்கள் பற்றிய விளக்கமும் மற்றும் அதன் முக்கியத்துவம் பற்றியும் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தார். இந்த பயிற்சியில் ஏக்கருக்கு 5 டன் மக்கிய தொழு உரத்தினை கடைசி உழவிற்கு முன்பு இட வேண்டும் என்றும், விதை நேர்த்தி செய்ய ரைசோபியம் 400 மி.லி, பாஸ்போ பாக்டிரியா 400மி. லி எண்ணெய்வித்து பயிர்களில் கலந்து விதைக்கவும், வயலில் இடுவதற்கு ரைசோபியம் 800 மி.லி , பாஸ்போ பாக்டிரியா 800மி.லி வயலில் இட வண்டும். பருவம் மற்றும் உயர் விளைச்சல் இரகங்களான நிலக்கடலை எள் மற்றும் சூரியகாந்தி போன்ற பயிர்களுக்கு ( TMV 13, VRI 8,9,10,CO8, கதிரி லபாக்சி) இரகங்களை பற்றி குறித்து கூறினார்.

மேலும் இப்பயிற்சியில் வேளாண் அறிவியல் நிலையம் குன்றக்குடி பேராசிரியர் திருமதி.அனிதா ஸ்ரீ அவர்கள் ஒருங்கிணைந்த களை மேலாண்மை, உர மேலாண்மை தொழில்நுட்பங்களான( ஜப்சம் ஒரு எக்டேருக்கு 400 கிலோ வீதம் 4045 நாளில் பாசனப்பயிருக்கும் 4070 வது நாளில் மானாவாரி பயிருக்கும் ஜப்சம் இட்டு மண் அணைக்க வேண்டும் என்றும், வளர்ச்சி ஊக்கிகள் ஏக்கருக்கு 4 கிலோ TNAU நிலக்கடலை ரிச் பூக்கும் பருவம் (2 கிலோ/ஏக்கர்) மற்றும் காய்பிடிக்கும் பருவம் (2 கிலோ/ஏக்கர்) தெளிக்க வேண்டும், 5 கிலோ எண்ணெய்வித்து நுண்ணூட்டம் உரம் (அ) 10 கிலோ ஜிங்க் சல்பேட் + 20 கிலோ மணல் கலந்து இட வேண்டும் என்றும் எடுத்து கூறினார்.

காளையார்கோவில் வட்டார துணை வேளாண்மை அலுவலர் திரு.செந்தில் அவர்கள் எண்ணெய்வித்து பயிர்களில் நோய் மற்றும் பூச்சி கண்டறியும் முறைகள் மற்றும் மேலாண்மை முறைகள் பற்றியும் நிலக்கடலை சுருள் பூச்சி கட்டுபடுத்த கம்பு மற்றும் திணை பயிர்களை ஊடுபயிராக பயிரிடுதல் விதைப்பு பட்டம் தொடங்கும் முன்பே விதைக்க வேண்டும் என்றும், வேர்ப்புழுவை கட்டுபடுத்த கோடை உழவு செய்யவும் புகையிலை வெட்டுப்புழு கட்டுபடுத்த விளக்குபொறி 1 மற்றும் இனக்கவாச்சிபொறி 5 எண்கள் பொருத்துதல் வேண்டும். எண்ணெய்வித்து பயிர்களில் ஊடுபயிராக ஆமணக்கு, துவரை போன்ற பயிர்களை பயிரிட வேண்டும் என்று எடுத்து கூறினார்.

உதவி வேளாண்மை அலுவலர் செல்வி .முத்துகாயத்ரி விவசாய அடையாள அட்டை பதிவு செய்ய தேவையான ஆவணங்கள் மற்றும் வேளாண்மைத்துறை மற்றும் இதர துறைகளில் உள்ள திட்டங்களை பற்றி எடுத்து கூறினார்.

காளையார்கோவில் வட்டார தொழில்நுட்ப மேலாளர் ஜோதி அட்மாதிட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் விவசாயிகள் பயிற்சிகள் சம்பந்தமான உள் மற்றும் வெளிமாநில,மாவட்ட அளவிலானபட்டறிவு, கண்டுணர்வுபயிற்சிகள் செயல் விளக்கத்திடல்கள் அமைத்தல் தொடர்பாக திட்டங்களைபற்றி விவசாயிகளுக்கு விரிவானமுறையில் எடுத்துக்கூறினார். உழவர் செயலிபயன்படுத்தும் முறைகள் பற்றியும் மற்றும் அதில் உள்ள 24 முகப்பு விபரம் பற்றி விரிவாக எடுத்து கூறினார். இயற்கைமுறையில் விவசாயம் செய்வதுமண்வளத்தை பாதுகாத்தல், இயற்கை உர கரைசலான ஜீவாமிர்தம், கனஜீவாமிர்தம் தயாரித்தல் மற்றும் அதன் பயன்பாடுகள் பற்றி எடுத்துக்கூறினார்.

தொழில்நுட்பமேலாளர் காளையார்கோவில் காளிஸ்வரி வட்டார உதவி பயிற்சியில் கலந்து கொண்டு பயிற்சிக்கானஏற்பாடுகள் செய்தார்.





# சிவகங்கை கிராபைட் தொழிற்சாலையை எம்.எல்.ஏ பார்வையிட்டு கலந்தாய்வு




சிவகங்கை, மே.24-

சிவகங்கை சட்டமன்ற உறுப்பினர் குழந்தைராணி நாச்சியார் நேற்று ( சனிக்கிழமை) சிவகங்கையில் உள்ள தமிழ்நாடு கனிம நிறுவனத்திற்கு சொந்தமான கிராபைட் தொழிற்சாலையை பார்வையிட்டு அங்குள்ள நிலைபாடுகள் குறித்து பணியாளர்களிடம் பேசினார். தொழிற்சாலையில் பணிபுரியும் அடிப்படை தொழிலாளர்களின் நிலைப்பாடுகளையும் அவர்களின் கோரிக்கைகளையும் கேட்டறிந்தார். பின்பு அவர் தொழிற்சாலையின் மேலாளர் மற்றும் தொழிற்சாலையின் நிர்வாகிகளுடன் கலந்து ஆய்வு செய்தார். அப்போது தொழிற்சாலையின் மேலாளர் கதிரவன் பேசும் போது : இந்த தொழிற்சாலையில் நாள் ஒன்றுக்கு 15 முதல் 18 டன் வரை கிராபைட் எடுக்கிறோம். கடந்த ஆறு மாதமாக சரக்குகள் தேக்கம் இருக்கிறது. இதற்கு டெண்டர் பிரச்சினை தான் காரணம். இந்த தொழிற்சாலைக்கு 238.5 ஹேக்டேர் நிலங்கள் இருப்பதால் போதுமான அளவில் கிராபைட் இருக்கிறது என்றார். அப்போது சிவகங்கை எம்.எல்.ஏ குழந்தைராணி நாச்சியார் பேசும்போது : தொழிற்சாலையின் மேலாளர் என்ற முறையில் உங்கள் உயர் அதிகாரிகளிடம் பேசி டெண்டர் பிரச்சினையை சரி செய்யுங்கள். இங்கு எடுக்கப்படும் கிராபைட் வெளி மாநிலங்களுக்கு கொண்டு போய் அங்கு தொழில்கள் செய்கிறார்கள். இதற்கு மாற்றாக இந்த கிராபைட் தொழிற்சாலையை மையமாக வைத்து அது சார்புடைய தொழில்களையும் உபரி தொழில்களையும் சிவகங்கை மாவட்டத்திலேயே தொடங்க வேண்டும். அப்போதுதான் இந்த பகுதியில் உள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். இது குறித்து தமிழகம் முதல்வரிடம் பேசி தீர்வு காண முயற்சி செய்வேன் என்றார்.



# பழனி நெய்க்காரப்பட்டி பகுதியில் 2 கிலோ கஞ்சா பறிமுதல்: 76 வயது முதியவர் கைது

திண்டுக்கல், மே.24-

திண்டுக்கல் மாவட்டம் பழனி நெய்க்காரப்பட்டி காவல் நிலையத்திற்கு உட்பட்ட பகுதிகளில் கஞ்சா மற்றும் போதைப்பொருள் புழக்கத்தைத் தடுக்க, பழனி காவல் துணை கண்காணிப்பாளர் தனஜெயன் அதிரடி உத்தரவு பிறப்பித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து, தாலுகா காவல் ஆய்வாளர் பாஸ்கரன், சார்பாய்வாளர் ரவிச்சந்திரன் மற்றும் போலீசார் பாப்பம்பட்டி பகுதியில் தீவிர சோதனையில் ஈடுபட்டிருந்தபோது, அங்கு சந்தேகப்படும்படியாக முதியவர் ஒருவர் நின்று கொண்டிருந்தார். போலீசாரைக் கண்டதும் அவர் அங்கிருந்து தப்பியோட முயன்றதாகத் தெரிகிறது.

உடனே சுதாரித்துக் கொண்ட போலீசார், அவரை மடக்கிப் பிடித்து தீவிர விசாரணை நடத்தினர். அப்போது அவர் முன்னுக்குப் பின் முரணாகப் பதிலளித்துள்ளார்.

2 கிலோ கஞ்சா பறிமுதல் செய்தனர்

இதையடுத்து போலீசார் அவரிடம் நடத்திய அதிரடி சோதனையில், அவர் கஞ்சா விற்பனையில் ஈடுபட்டது அம்பலமானது. அவரிடமிருந்து 2 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில், அவர் பாப்பம்பட்டி பெருமாள் கோவில் தெருவைச் சேர்ந்த ராசு தேவர் மகன் மூக்கத்தேவர் (76) என்பது தெரியவந்தது.

நீதிமன்றக் காவல்:

இதுகுறித்து தாலுகா காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, கைது செய்யப்பட்ட மூக்கத்தேவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

வயதான முதியவர் ஒருவர் கஞ்சா வழக்கில் அதிரடியாகக் கைது செய்யப்பட்ட இந்தச் சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# வானிலை முன்னறிவிப்பு: தமிழகத்தில் 19 மாவட்டங்களில் கனமழை வாய்ப்பு

சென்னை::மே 24-

தமிழகத்தில் கோவை, சேலம், வேலூர், திருச்சி, மதுரை உள்ளிட்ட 19 மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தென்கிழக்கு மற்றும் அதனை ஒட்டிய மத்திய வங்கக்கடல் பகுதிகளில் சுமார் 3.1 கிமீ முதல் 5.8 கிமீ உயரம் வரை ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக தமிழகத்தில் நாளையும் (மே 24), நாளை மறுதினமும் ஒருசில இடங்களிலும், 26 முதல் 29ம் தேதி வரை ஓரிரு இடங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். தமிழகத்தில் நாளையும், நாளை மறுதினமும் நீலகிரி, கோவை, ஈரோடு, திருப்பூர், சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், வேலூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, பெரம்பலூர், திருச்சி, நாமக்கல், கரூர், திண்டுக்கல், தேனி மற்றும் மதுரை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 40 முதல் 50 கி.மீ வேகத்தில்) கூடிய கனமழை பெய்யக்கூடும்.26ம் தேதி கோவை மற்றும் திருப்பூர் மாவட்டங்களின் மலைப்பகுதிகள், நீலகிரி, தேனி, திண்டுக்கல், விருதுநகர், தென்காசி திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல், பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும். தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் நாளை முதல் 27ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தை விட குறைவாக இருக்கக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 104 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 86 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும். தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக திருநெல்வேலி மாவட்டம் நாலுமுக்கு, ஊத்து, திருவண்ணாமலை மாவட்டம் போளூரில் தலா 4 செமீ, திருநெல்வேலி மாவட்டம் காக்காச்சி, கள்ளக்குறிச்சி மாவட்டம் விருகாவூர், திருப்பத்தூரில் தலா 3 செமீ மழை பதிவாகியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# ஆற்காட்டில் ஸ்ரீ கெங்கையம்மனுக்கு 62 ஆம் ஆண்டு ஜாத்திரை முன்னிட்டு பால்குட ஊர்வலம்!

ராணிப்பேட்டை மே.24-

ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு சீதாராமன் தெருவில் எழுந்தருளி அருள் பாலித்து வரும் அருள்மிகு ஸ்ரீ கெங்கை அம்மனுக்கு 62 ஆம் ஆண்டு ஜாத்திரை திருவிழா முன்னிட்டு பால்குடம் ஊர்வலம் சிறப்பாக நடைபெற்றது. இரண்டாம் நாள் நிகழ்வாக காப்பு கட்டி விரதம் இருந்த சுமார் 200க்கும் மேற்பட்ட பக்தர்கள் மேளத்தால வாத்தியம் முழங்க ஆற்காடு தென் பாலாற்றங்கரையோரம் எழுந்தருளி அருள் பாலித்த வரும் அருள்மிகு ஸ்ரீ வீர ஆஞ்சநேயர் ஆலயத்தில் இருந்து அண்ணா சாலை பேருந்து நிலையம் கலவை ரோடு வழியாக ஊர்வலமாக பால்குடம் எடுத்து வந்து அம்மனுக்கு அபிஷேகம் செய்து தங்கள் வேண்டுதலை நிறைவேற்றினர். முன்னதாக வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்ட ஸ்ரீ கெங்கை அம்மனுக்கு சிறப்பு பூஜைகள் செய்து ஊர்வலம் துவங்கியது. இதில் பக்தர்கள் பொதுமக்கள் என ஏராளமான கலந்து கொண்டனர்.

# "8,000 தனியார் மருத்துவமனைகளுக்கு திடீர் அனுமதி ஏன்?" தவெக அரசுக்கு சீமான் சரமாரி கேள்வி



சென்னை:மே 24-

"8,000 தனியார் மருத்துவமனைகளுக்கு இப்போது எதற்கு திடீர் அனுமதி வழங்கப்படுகிறது?" என்று கேள்வி எழுப்பியுள்ள நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், "மருத்துவத் துறையில் கண்மூடித்தனமாக தனியார்மயத்தை ஊக்குவிக்கும் விதமாக அரசின் செயல்பாடு உள்ளது" என சீமான் கண்டனம் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், "அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களை தரம் உயர்த்துவோம், கிராமப்புற மருத்துவமனைகளை நவீனமாக்குவோம் என தேர்தலில் வாக்குறுதி யளித்து விட்டு, இப்போது, புதிதாக 8 ஆயிரம் மருத்துவமனைகளை திறப்பதற்கு இணையம் வாயிலாக விண்ணப்பித்தாலே தற்காலிக அனுமதி வழங்கப்படும் எனும் தவெக அரசு அறிவித்திருப்பது அதிர்ச்சியளிக்கிறது. இவ்வாறு மருத்துவத் துறையில் கண்மூடித்தனமாக தனியார்மயத்தை ஊக்குவிக்கும் அரசின் செயல்பாடு, வாக்கு செலுத்தி ஆட்சி அதிகாரத் தில்ஏற்றி வைத்த மக்களுக்கு செய்யும் ஜனநாயகத் துரோகமாகும்.மேலும், அரசு மருத்துவமனைகளின் குறைபாடுகளையும், சிக்கல்களையும் தீர்த்து, அவற்றை தரம் வாய்ந்ததாக மாற்ற முயற்சி எடுக்காமல், 8 ஆயிரம் தனியார் மருத்துவமனைகளுக்கு இப்போது எதற்கு திடீர் அனுமதி வழங்கப்படுகிறது? மத்தியில் ஆளும் பாஜக அரசும், மாநிலத்தை ஆண்ட முந்தைய திமுக, அதிமுக அரசுகளும் தனியார்மயத்தை அரசின் நிர்வாகக் கொள்கை முடிவாக கொண்டதையே தவெக அரசும் பின்பற்றுமென்றால், எங்கிருக்கிறது மாற்று அரசியல்? எங்கிருக்கிறது மக்களுக்கான ஆட்சி? தனியார் முதலாளிகளின் லாபவெறிக்கு மருத்துவத் துறையை தாரைவார்த்திருப்பது கடும் கண்டனத்துக்குரி யது .எனவே,மருத்துவத் துறையை தனியார்மயமாக்கும் செயலை கைவிட்டு, அரசு மருத்துவமனைகளையும், ஆரம்ப சுகாதார நிலையங்களையும் தரம் உயர்த்தி, தரமான மருத்துவ சிகிச்சைகள் அனைவருக்கும் கிடைப்பதை அரசு உறுதி செய்ய வேண்டும்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161